

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்ற உறுதிமொழியினை ஏற்றுக்கொள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி டாக்டர். இராதாகிருஷ்ணன் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுடன் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி , எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் ஏற்றுக் கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநிவாச பெருமாள் , தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருத்தணி கோட்டாட்சியர் தீபா, திருவள்ளூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன்நகர் மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், நகரச் செயலாளர் வி.வினோத் குமார்,நகர் மன்ற துணைத் தலைவர் சாமிராஜ்உள்பட பலர் உள்ளனர்.

# வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியங்களில் வளர்ச்சிப் பணிகள்!

## மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் ஆய்வு!

காஞ்சிபுரம், ஆக 14-

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை நேற்று (13.08.2024) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அய்யன்பேட்டை ஊராட்சியில் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)-II202122 நெகிழி கழிவு மேலாண்மை அலகு மூலம் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்பட்டு வரும் நெகிழி அரவை கூடத்தினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் கலைஞர் கனவு இல்ல குடியிருப்புகளையும் மற்றும் நாயக்கன்பேட்டை ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் கலைஞர் கனவு இல்ல குடியிருப்புகளையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பின்பு காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் குருகுலம் பெண் குழந்தைகளுக்கான இல்லத்தில் ஆய்வு மேற்கொண்டு, இல்லத்தில் மதிய உணவு சாப்பிடும் மாணவியரிடம் உணவின் தரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

இவ் ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. க.ஆர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் அருண், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள முத்து மாரியம்மன் கோவில் வளாகத்தில் பக்தர்களுக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. உணவு வழங்கினார். உடன் மாநகர கழக செயலாளர் சன் பிரகாஷ், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், பகுதி கழக செயலாளர் நாராயண பிரசாந்த் மாமன்ற உறுப்பினர் சத்யா கோ.ரவி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் உள்பட பலர் உள்ளனர்.

### தருமபுரி மாவட்டத்தில்

# வட்டார வளர்ச்சித் திட்ட ஆய்வுக் கூட்டம்!

## மாநில திட்ட ஆணைய உறுப்பினர் கே.தீனபந்து - மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

தருமபுரி, ஆக.14

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில், வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் (FOCUS BLOCK DEVELOPMENT PROGRAMME) வளர்ச்சிக் காரணிகள் குறித்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் சென்னை மாநில திட்ட ஆணைய உறுப்பினர் கே.தீனபந்து (ஓய்வு) தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி முன்னிலையில் நேற்று நடைபெற்றது

தருமபுரி மாவட்டத்தில் வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டம் (Focus block Development Programme) காரிமங்கலம் மற்றும் அரூர் வட்டாரங்களில் செயல்படுத்தபட உள்ளது. இதனைதொடர்ந்து, சம்மந்தப்பட்ட வட்டாரங்களின் வளர்ச்சி உத்தி அறிக்கை, தயார் செய்யப்பட்டு வட்டார ஆண்டுத் திட்டம் 2024-2025 (Block annual plan) தயார் செய்யவும், வட்டார உத்தி அறிக்கையில் இடம் பெற்றுள்ள வளர்ச்சி காரணிகள் (key Development Indicators) குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை கொண்டு ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் அரூர் மற்றும் காரிமங்கலம் ஆகிய இரு வட்டாரங்களுக்கான வளர்ச்சி காரணிகள் (Key Development Indicators) துறை வாரியாகவும் திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த கூட்ட குறியீடுகள் (KDI) தொடர்பாக உரை நிகழ்த்தப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், திட்ட இயக்குநர்/கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி,) மாவட்ட நிலையிலான அனைத்து முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வயநாடு - நிலச்சரிவில் பலியானவர்களை அடையாளம் காண

# 100-க்கும் மேற்பட்டவர்களுக்கு உதவிய பெண்!

திருவனந்தபுரம், ஆக.14-

கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி பலியான 400-க்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், யில் நூற்றுக்கும் அதிக மானவர்களின் கதி என்ன? என்பது தெரியாமல் இருக்கிறது. பலரது உடல்களை கண்டுபிடிக்க அவர்களது குடும்பதின ருக்கு ஏராளமான தன்னார்வ தொண்டர்கள் உதவி செய்திருக்கின்றனர்.

அவர்களில் ஷைஜா பேபி (வயது48) என்ற பெண் அடையாளம் தெரியாத உடல்களை கண்டுபிடிக்கநூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தனி நபராக இருந்து உதவி செய்திருக்கிறார். இவர் பிறந்து வளர்ந்தது சூரல்மலை கிராமம். அவர் திருமணம் செய்து சென்றது முண்டகை கிராமம். இதன் காரணமாக சூரல்மலை மற்றும் முண்டகை ஆகிய இரு கிராமங்களுடன் தொடர்பில் இருந்தார்.

அந்த கிராமங்களை சேர்ந்த பெரும்பாலானவர்கள் அவருக்கு தெரிந்தவர்க ளாகவே இருந்துள்ளனர். ஷைஜா பேபியின் கணவர் 2005-ம் ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்சில் வேலை பார்த்த போது இறந்து விட்டார். கணவரை இழந்து 2 குழந்தைகளுடன் வாழ்ந்து வந்த ஷைஜா பேபி, 2006-ம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பணிபுரியும் சுற்றப்புற குழுவின் தலைவரானார். 2015- ம் ஆண்டு முண்டகை வார்டில் இருந்து மேப்பாடி கிராம பஞ்சாயத்து னராக உறுப்பி தேர்ந்தெடுக்கப்பட்டு. அங்கேயே துணைத்தலைவரானார். இது அந்த பகுதியில் அறிமுகம் இல்லாத பலரையும் ஷைஜா பேபிக்கு தெரிந்து கொள்ள வைத்தது.

இவையே தற்போது நிலச்சரிவில் பலியான பலரை அடையாளம் காண்ப தற்கு ஷைஜா பேபிக்கு உதவியி ருக்கிறது. நிலச்சரிவு ஏற்பட்டதுமே மீட்பு பணியில் ஈடுபட தன்னார்வலராக தன்னை இணைத்துக் கொண்டார்.

பல உடல்களை அவர்கள் அணிந்தி ருந்த நகைகள், நகைகளில் உள்ள வித்தியாசமான டிசைன்கள், நெயில் பாலிஷ், பச்சை குத்தியிருத்தல், தாடியின் வடிவம் உள்ளிட்ட பல அம்சங்களை சரியாக தெரிவித்து பலரை அடையாளம் காண உதவி செய்துள்ளார். இது குறித்து ஷைஜா பேபி கூறியதாவது:-

நான் ஒருவரை பார்க்கும்போது அவசர அவசரமாக “ஹாய்” என்று சொல்லி கடந்துசெல்லும் ஆள் இல்லை. யார் வந்தாலும் அவர்களுடன் பேசி நலம் விசாரித்து விட்டு தான் செல்வேன். இது எனது வழக்கமாக இருந்ததால் சூரல்மலை மற்றும் முண்டகை பகுதியை சேர்ந்த மக்கள் அனைவரும் எனக்கு அறிமுக மானவர்களாகவே இருந்தனர்.

இதுவே பலரது உடலை நான் அடையாளம் காண உதவியாக இருந்தது.

14 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமியால் தனது தாயை அடையாளம் காண முடியவில்லை. அந்த பெண்ணின் திருமண மோதிரத்தின்மூலம் நான் அவரை அடையாளம் கண்டேன்.

இதேபோல் 78 வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர் சமீபத்தில் ஹஜ் சென்று திரும்பி யிருந்தார். அவர் தனது தாடியை வித்தியாசமாக கத்தரித்து வைத்திருப்பாரர். அவரது குடும்பத்துடன் நாங்கள் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தோம். அவரது தாடி மற்றும் உதடு அமைப்பை வைத்து அந்த முதியவரை அடையாளம் கண்டு பிடித்தேன். சவக்கிடங்கில் மணிக்கணக்காக நின்று கொண்டு. நெருங்கி பழகியவர்களை அடையாளம் கண்டது என்னை மிகவும் சோகத்தில் ஆழ்த்தியது.

இவ்வாறு அவர் கூறினார்.



விழுப்புரம் மாவட்ட முன்னாள் இலக்கிய அணி தலைவர் திருவாமாத்தூர் ஆசிரியர் வ.கண்ணப்பன் இயற்கை எய்தினார் . அன்னாரது உடலுக்கு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதம சிகாமணி ஆகியோர் அஞ்சலி செலுத்தி வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர் . சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி, குமார் கல்வி நிறுவனர் கோத.குமார், கிளைக் கழக நிர்வாகிகள் குமார், மணிகண்டன், துரைக்கண்ணு, தாமோதரன், திருநாவுக்கரசு, சரவணன் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

# சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (14.08.2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகத்தில் (எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600034) மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / மாநில நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப்பணிகள்

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சென்னகேசவன்

## ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

“தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.


தலைமைக் கழகம்
தி.மு.க.

# ஏ.கே.ஜெகதீசன் Ex.MC

தலைமைச் செயற்குழு உறுப்பினர், பகுதிக் கழகச் செயலாளர்
சேப்பாக்கம் பகுதி (1977 - 2000), கலைஞர் விருது - 2019

## 4ஆம் ஆண்டு புகழ் வணக்கம்

11.3.1930 – 14.8.2020




“ஜெகதீசன் நெருப்புக் குண்டத்தையும் உருவாக்குவார்
நெருப்புக் குண்டத்திலும் குதிப்பார்”
“நெருக்கடி நிலை காலத்தில் என்னைப் பாதுகாத்த ஜெகதீசனை
என் உயிர் உள்ள வரை மறக்கமாட்டேன்” - தலைவர் கலைஞர்

மண்வாழும் நாள்வரையும் வாழ்ந்திருப்பார்-எங்கள்
மனங்களில் மணம்வீசிப் பூத்திருப்பார்
கண்காணா நிலையென்று யார்உரைத்தார்-என்றும்
கருத்தாகி காலத்தால் நிறைந்திருப்பார்

நினைவுகளுடன்

**A.K.J.இளஞ்செழியன்** M.A., M.Phil., B.L.,
கூடுதல் இயக்குநர், பொருளியல் - புள்ளியியல் துறை

**குடும்பத்தினர் – கழகத்தினர்**